புதுமலர்: 18 இதழ்: 05 கார்த்திகை - மார்கழி

# அனல்

ஆசிரியர்: போதகர் வே.மகாராஜா

01.11.2021



அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்
ஆவியிலே அனலாயிருங்கள்:
கர்த்தருக்கு ஊழியம் செய்யுங்கள்.
- ரோமர் 12:11 -

## கர்த்தருடைய வார்த்தையோடு இணைந்த வாழ்க்கை

சங்கீதம் 119:1 கர்த்தருடைய வேதத்தின்படி நடக்கிற உத்தம மார்க்கத்தார் பாக்கியவான்கள்.

சீயோன் தேவாலயப் பிரசுரம் Zion Church Publication

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனல்

## பொருளடக்கம்

01. அனலின் குரல்
02. கதையும் கற்றதும்
03. நற்செய்திப்பகுதி
04. வாலிபர் வளாகம்
05. பெண்கள் பக்கம்
06. வினா விடை - 106
07. சிறுவர் வட்டம்
08. அருட்பணியாளர் சரிதை
09. குறுக்கெழுத்துப்போட்டி - 104
10. அனலின் ஆன்மீக விருந்து
11. கோப்பையை உடைத்தது யார்?



## ஜெப வேண்டுதல்

வியாதியினாலும், வேதனையினாலும், குடும்ப பிரச்சினையினாலும் கலக்கமுற்று என்ன செய்வது என்று அறியாமல் திகைக்கும் தாயே, தந்தையே, சகோதரனே, சகோதரியே கலக்கம் வேண்டாம். உங்கள் பிரச்சினைகளையும் தேவைகளையும் எங்களுக்கு எழுதுங்கள். உங்களுக்காக ஜெபிப்போம்.

### எழுத வேண்டிய முகவரி:

சீயோன் ஜெபக்குழு,
இல 29, 29/1,
இராமையாச் செட்டியார் ஒழுங்கை,
யாழ்ப்பாணம், இலங்கை.

Zion Prayer Group,
No: 29, 29/1 Ramaiah Chettiar Lane,
Jaffna, Sri Lanka.

### மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

ஆசிரியர் "அனல்",
இல 29, 29/1, இராமையாச் செட்டியார் ஒழுங்கை
யாழ்ப்பாணம், இலங்கை.

The Editor "Anal",
No: 29, 29/1 Ramaiah Chettiar Lane,
Jaffna, Sri Lanka.

T.P.: 0094(0) 21-222 2707 e-mail: jazion@sltnet.lk

திக்கற்றவர்களாய் போகும் உன் பிள்ளைகளை ஒப்புவி, நான் அவர்களை உயிரோடே காப்பாற்றுவேன். உன் விதவைக [illegible] - எரேமியா 49:11 -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனலின் குரல்

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்!

இம்மட்டும் எம்மை தாங்கி, பாதுகாத்து ஆசீர்வதித்த நம் தேவாதி தேவனுக்கு ஸ்தோத்திரம்.

இயேசு கிறிஸ்துவின் கிருபையால் இவ் வருடத்தின் இறுதி அனலினூடாக உங்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சி. இம்மட்டும் நமக்கு உதவி செய்த ஆண்டவர் தொடர்ந்தும் உதவி செய்வார்.

2021இன் கடைசி நாட்களுக்குள் வந்திருக்கின்றோம். தேவனோடு, தேவனுடைய சித்தத்துடன் செயலாற்றினோமா? என்பதை ஒரு கணம் திரும்பிப் பாருங்கள். கர்த்தரை வேதனைப்படுத்திய செயல்களுக்காக அவரிடம் மன்னிப்பு கேட்டுப் பெற்றுக் கொள்ளுங்கள். சுயநல நோக்கோடு மற்றைய தேவபிள்ளைகளை உதாசீனப்படுத்தி வேதனைப்படுத்த வேண்டாம். இயேசு கிறிஸ்து எங்கள் மீது அன்பு காட்டியது போல ஒவ்வொருவரும் அன்பைக் காண்பிப்போம். புதிய ஆண்டை எதிர்பார்த்து காத்திருக்கும் நாம் தேவனோடு இணைந்து நடப்போம்.

கடந்து சென்ற நாட்கள், மாதங்களில் தேவன் நம்மை பாதுகாத்தார். கொரோனாவின் பாதிப்புக்களில் தப்புவித்தார். தொடர்ந்தும் தேவனோடு இணைந்திருப்போம். உண்மையுள்ளவர்களாய் இருப்போம். புதிய ஆண்டில் தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

- ஆசிரியர் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கதையும் கற்றதும்

## நடித்து ஏமாற்றாதே!

❑ வை. விமலதாஸ்

பெரியவர் ஒருவர் மலைப்பகுதியில் தன்னுடைய குதிரை மீது வந்து கொண்டிருந்தார். அப்பொழுது அவர் வரும் வழியில் பாதையின் ஓரமாக ஒருவன் மயங்கிக் கிடந்தான். அவனைக் கண்ட அப் பெரியவர் தன்னுடைய குதிரை மேலிருந்து கீழே இறங்கினார்.

அவனை அசைத்துப் பார்த்தார், அவன் அசையாமல் கிடக்கவே தனது குதிரையின் பக்கவாட்டில் தொங்கிய குடுவையில் இருந்த நீரை எடுத்து அவன் முகத்தில் தெளித்து வாயிலும் புகுட்டினார்.

மயக்கம் தெளிந்து கண் விழித்த அந்த மனிதனை மெதுவாகப் பிடித்துத் தூக்கி தன்னுடைய குதிரை மீது ஏற்றினார். அந்த மனிதன் குதிரை மீது உட்கார்ந்த மறுகணமே அந்தக் குதிரையின் கடிவாளத்தை உலுக்கவும் குதிரை தடதடவென்று பறந்தோடி மறைந்து விட்டது.

இதை எதிர்பார்க்காத பெரியவர் ஒருகணம் திகைத்துத்தான்போனார். சிறிது நேரத்தின் பின் தான் அவன் ஒரு திருடன் என்பதும் இதுவரை அவன் நடித்துள்ளான் என்பதும் தெரிந்தது அவருக்கு.

இப்போது குதிரை இல்லாததால் இரவு முழுவதும் மெல்ல மெல்ல நடந்து தன் வீட்டை அடைந்த பெரியவர், சில தினங்கள் கழித்து தனக்கு குதிரை வாங்க சந்தைக்குப்போனார்.

அங்கே சென்றவருக்கு பெரிய அதிர்ச்சி காத்திருந்தது. ஆம்! குதிரைகள் விற்குமிடத்தில் அன்றைக்கு இவரை ஏமாற்றிச் சென்ற அந்த திருடன் இவரது குதிரையுடன் நின்று கொண்டிருந்தான்.

பெரியவர் மெல்லச் சென்று அவனது தோளைத் தொட்டார். திரும்பிப் பார்த்த திருடன் அதிர்ச்சியடைந்து உறைந்து போய் நின்றான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியவர் மெல்லச் சிரித்தார். பின்னர்,

'சொல்லாதே!' என்றார்.

திருடன் மிரண்டான். எது? என்ன? என்று சம்பந்தமில்லாமல் உளறிக் கொட்டினான்.

இப்போது பெரியவர் சொன்னார்;

என்னுடைய குதிரையை நீயே வைத்துக்கொள்.

ஆனால் நீ அதை அடைந்த விதத்தை யாரிடத்திலும் சொல்லாதே!

மக்களுக்கு இப்படி ஒரு சம்பவம் நடந்தது தெரியவந்தால் எதிர்காலத்தில் உண்மையிலேயே யாராவது சாலையில் மயங்கிக் கிடந்தால் கூட உதவ முன்வரமாட்டார்கள்.

நான் இந்த குதிரையை இழந்ததால் எனக்கு ஏற்படும் இழப்பை பற்றி நான் கவலைப்படவில்லை.

காரணம் சில தினங்கள் உழைத்து சம்பாதித்து வேறு ஒரு குதிரையை நான் வாங்கிவிட முடியும்.

ஆனால் தீயவன் நீ ஒருவன் தவறு செய்ய, நல்லவர்கள் பலருக்கு காலா காலத்திற்கும் உதவி கிடைக்காமல் அவர்கள் உயிர் போகக்கூடும். புரிகிறதா? என்றார்.

இதைக் கேட்ட திருடனின் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தது.

ஆம்! நண்பர்களே, இந்த வருடத்தின் இறுதிப்பகுதிக்குள் வந்திருக்கும் நாம் எம்மை குறித்தும் சற்று யோசித்துப் பார்க்க வேண்டும். இந்த வருடத்தில் இந்த திருடனைப் போன்று எமது குறுகிய இலாபங்களுக்காக எத்தனை நல்ல காரியங்களை குலைத்துப் போட்டிருக்கிறோம், அல்லது எத்தனை பேரை ஏமாற்றி எமது இலக்குகளை அடைந்திருக்கிறோம். எமது குறுகிய இலாபத்தினால் எத்தனை பேரை இடறப்பண்ணி, நிலைகுலையப்பண்ணி, தாறுமாறக்கியிருக்கிறோம். குறுகிய இலாபங்களுக்காக நல்ல கோட்பாடுகளை ஒரு போதும் நாம் சிதைத்துவிடக்கூடாது. நல்லவர்களையும் அவர்களின் நல்ல நட்பையும் இழந்து விடக்கூடாது என்பதைப் புரிந்து கொள்வோம். **நீதிமொழிகள் 26:23 நேச அனலைக் காண்பிக்கிற உதடுகளோடு கூடிய தீயநெஞ்சம் வெள்ளிப் பூச்சு பூசிய ஓட்டைப்போலிருக்கும்.**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அழுகையின் சத்தம் அறிபவர்

❑ பர்னபா




கிறிஸ்துவுக்குள் அன்பின் அனல் வாசகர்களுக்கு நல் வாழ்த்துக்கள். இந்த ஆண்டின் இறுதி சஞ்சிகையூடாக உங்களை சந்திப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். இவ் ஆண்டின் தொடக்கம் முதல் இறுதி வரைக்கும் நடத்தி வந்த தேவனுக்கே மகிமையுண்டாகட்டும். நாம் உயிரோடு இருப்பது கர்த்தருடைய பெரிதான கிருபையே – ஆமென்.

**சங்கீதம் 6:8b கர்த்தர் என் அழுகையின் சத்தத்தைக் கேட்டார்.**

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே தேவனுடைய மனுஷன் தாவீது சொல்கிறார்; **'கர்த்தர் என் அழுகையின் சத்தத்தைக் கேட்டார்'** என்பதாக. நாம் ஒருவேளை மற்றவர்கள் அறியத்தக்கதாக வேதனைகள், நெருக்கங்களை தாங்க முடியாமல் அழுவதுண்டு. சிலவேளைகளில் யாருக்குமே தெரியாமல் நாம் தனிமையாக இருந்து எம் வாழ்க்கையின் நிலைமைகளைக் குறித்து யோசித்து அழுவதுண்டு. **எது எப்படி இருந்தாலும் அவருடைய பிள்ளைகளின் அழுகையின் சத்தத்தை அவர் கேட்கிறார்.**

தாவீது தன் வாழ்க்கையிலே பல சந்தர்ப்பங்களில் இருதயம் நொந்து வேதனைப்பட்டு அழுதிருப்பதை நாம் வேதாகமத்தில் காண்கிறோம்.

**1சாமுவேல் 30:4 அப்பொழுது தாவீதும் அவனோடிருந்த ஜனங்களும் அழுகிறதற்குத் தங்களில் பெலனில்லாமல் போகுமட்டும் சத்தமிட்டு அழுதார்கள்.**

அமலேக்கியர் தாவீதினதும் அவனுடைய மனிதர்களினதும் உடைமைகளையும், பிள்ளைகளையும், மனைவிமாரையும் மற்றும் எல்லாவற்றையும் சூறையாடி கொண்டு சென்ற போது அவர்களுக்கு அழுகிறதற்கு பெலன் இல்லாமல் போகுமட்டும் அழுகிறார்கள். அதே வண்ணமாக, சங்கீதம் 32, 51இலும் தாவீது தேவன் தன்னுடைய அக்கிரமத்தின் மீறுதல்களை மன்னிக்கும்படியாக தேவனை நோக்கி மனங்கசந்து அழுவதைப் பார்க்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1சாமுவேல் 20:41 பிள்ளை யாண்டான் போனபின்பு, தாவீது தென்புற மான இடத்திலிருந்து எழுந்து வந்து, தரையிலே முகங்குப்புற விழுந்து, மூன்று விசை வணங்கினான்; அவர்கள் ஒருவரை ஒருவர் முத்தஞ் செய்து அழுதார்கள்; தாவீது மிகவும் அழுதான்.**

தனக்கு தீமைகள் தொடர்ந்து இழைக்கப்பட்டதினாலே தன் உயிர்த் தோழனாகிய யோனத்தானின் முன்பாக நின்று அழுகின்றார் தாவீது.

இப்படியாக தாவீது தேவனை நோக்கிப் பார்த்து, அழுது, கண்ணீர்விட்ட ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தேவன் அவருடைய சத்தத்தைக் கேட்டு அற்புத மாய் வழிநடத்தினார்.

**11இராஜாக்கள் 20:3 ஆ கர்த்தாவே, நான் உமக்கு முன்பாக உண்மையும் மன உத்தமமுமாய் நடந்து, உமது பார்வைக்கு நலமானதைச் செய்தேன் என்பதை நினைத்தருளும் என்று விண்ணப்பம்பண்ணினான். எசேக்கியா மிகவும் அழுதான்.**

இவ் அதிகாரத்திலே எசேக்கியா ராஜா தனக்கு தீராத வியாதி அதாவது 'அரிபிளவை' என்று சொல்லப்படுகிற 'புற்றுநோய்' பிடித்திருந்ததினால் மரணத் திற்கு ஏதுவாக காணப்பட்டார். சில நாட்களுக்குள் நீர் மரணமடைந்துவிடுவீர் என்று ஏசாயா தீர்க்கதரிசியினால் சொல்லப்பட்டதைக் கேட்ட போது தேவனை நோக்கி அழுது விண்ணப்பத்தை ஏறெடுக்கிறார். அப்பொழுது தான் தேவன் எசேக்கியா ராஜாவுக்கு 15 வருடங்களைக் கூட்டிக்கொடுக்கிறார்.

ஆம் பிரியமான சகோதர சகோதரிகளே, நீங்களும் ஒருவேளை பொல்லாத வியாதியினாலே வேதனைப் பட்டு ஒவ்வொரு நாளும் மரணத்தை உத்தரித்துக் கொண்டிருக்கிறீர்களா? எப்பொழுது நமக்காக தண்ணீர் கலக்கப் படும் என்று எதிர்பார்த்திருந்த வியாதிஸ் தர்களைப் போல நீங்களும், எப்பொழுது எனக்கு சுகம் கிடைக்கும் என்று அங்கலாய்த்துக் கொண்டிருக்கலாம். வருடம் தொடங்கி முடிந்து போகும் நிலையும் வந்துவிட்டது. ஆனால் எனக்கு இன்னும் ஆரோக்கியமில்லை, சுகமில்லை, பெலனில்லை, விடுதலையில்லை என்று இருதயத்தில் நொந்து துவண்டு போயி ருக்கிற ஜனமே கேள்! எசேக்கியாவை விடுதலையாக்கி பூரண சுகத்தைக் கொடுத்து ஆயுசையும் கூட்டிக்கொடுத்து அந்தக் காலத்தில் தானே குழந்தையை யும் கொடுத்து ஆசீர்வதித்த ஆண்டவர் உங்களுக்கும் அற்புதமான சுகத்தைத் தந்து ஆச்சரியமான முறையில் வழி நடத்துவார்.

**11நாளாகமம் 33:11-13 (11.) ஆகையால் கர்த்தர்: அசீரியா ராஜாவின் சேனாபதிகளை அவர்கள்மேல் வரப் பண்ணினார்; அவர்கள் மனாசேயை முட் செடிகளில் பிடித்து, இரண்டு வெண்கலச் சங்கிலியால் அவனைக் கட்டிப் பாபிலோ னுக்குக் கொண்டுபோனார்கள். 12. இப்படி அவன் நெருக்கப்படுகையில் தன் தேவனாகிய கர்த்தரை நோக்கிக் கெஞ்சி, தன் பிதாக்களின் தேவனுக்கு முன்பாக மிகவும் தன்னைத் தாழ்த்தி னான். 13. அவரை நோக்கி, அவன் விண்ணப்பம் பண்ணிக் கொண்டிருக்கிற போது, அவர் அவன் கெஞ்சுதலுக்கு இரங்கி, அவன் ஜெபத்தைக் கேட்டு, அவனைத் திரும்ப எருசலேமிலுள்ள தன்னுடைய ராஜ்யத்திற்கு வரப்பண் ணினார்; கர்த்தரே தேவன் என்று அப்பொழுது மனாசே அறிந்தான்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ் அதிகாரத்திலே மனாசே ஏன்று சொல்லப்படுகிற எசேக்கியாவின் மகன் தேவனை நோக்கி அழுது, கெஞ்சி, விண்ணப்பம் பண்ணி மனந்திரும்புவதைப் பார்க்கிறோம்.

இஸ்ரவேலை அரசாண்ட சகல ராஜாக்களுக்குள்ளும் மனாசே என்ற இந்த ராஜா இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு விரோதமாக பொல்லாத பாவத்தை செய்து, தேவன் தம்முடைய நாமம் விளங்கும் என்று சாலமோனோடே சொன்ன தேவாலயத்திலே அந்நிய தேவர்களின் விக்கிரகங்களை, உருவச் சிலைகளை ஸ்தாபித்து பலி செலுத்தி தேவனை மிகவும் கோபப்படுத்தினான். இதனால் அவனை தேவன் மிகவும் கொடூரமாக தண்டிக்கிறார். அப்பொழுது தான் மனாசே ராஜா தேவனை நோக்கி கெஞ்சிஅ முது மனந்திரும்புகிறான்.

அன்பானவர்களே, ஒருவேளை நீங்களும் மனாசே ராஜாவைப் போல தேவனை விட்டு தூரம் போய் உங்கள் விருப்பப்படி வாழ்ந்து தேவனுக்கு எதிராக பொல்லாத பாவத்தை செய்து வாழ்ந்து கொண்டிருக்கலாம். உங்கள் பாவத்தினாலே வேதனைகளையும், துக்கத்தையும் அனுபவித்துக் கொண்டிருக்கலாம்.

மனாசேயைப் போல தேவனிடம் பாவத்தை அறிக்கையிட்டு மனந்திரும்புங்கள். உங்கள் அக்கிரமங்களை விட்டு அன்பரிடம் திரும்புங்கள். வேதம் சொல்கிறது; 'சாகிறவனுடைய சாவை நான் விரும்புகிற தேவனல்ல' என்பதாக. உங்களுடைய நித்திய அழிவை தேவன் விரும்பவில்லை. நீங்கள் பிழைப்பதையே அவர் விரும்புகிறார்.

மனந்திரும்புங்கள்; பிழைப்பீர்கள்.

பிரியமானவர்களே ஆகாரை அவதானித்துப் பாருங்கள்.

**ஆதியாகமம் 21:16 பிள்ளை சாகிறதை நான் பார்க்கமாட்டேன் என்று, எதிராக அம்பு பாயும் தூரத்திலே போய் உட்கார்ந்து சத்தமிட்டு அழுதாள்.**

ஒருவேளை நீங்களும் உங்கள் பிள்ளைகளுடைய நிலைமைகளைக் குறித்து கவலைப்பட்டு கலங்கிப்போய் அழுகையோடும், துயரத்தோடும் காணப்படலாம். அன்று ஆகாருடைய அழுகையைப் பார்த்து தண்ணீர் கொடுத்த தேவனாகிய கர்த்தர் உங்களுடைய அழுகையின் நிலையைப் பார்த்து உங்களுக்கும் அற்புதம் செய்வார். கலங்காதீர்கள்.

அன்னாளை நினைத்துப் பாருங்கள். பிள்ளை இல்லாமையாலே மற்றவர்களால் மனம் நோகடிக்கப்படுகிறாள். ஒரு நாள், இரண்டு நாள் அல்ல அனேக ஆண்டுகளாய் இந்த வேதனைகளை அனுபவித்தாள்.

**1சாமுவேல் 1:10 அவள் போய், மனங்கசந்து, மிகவும் அழுது, கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணி,**

ஆம் கர்த்தர் அழுகையின் சத்தத்தைக் கேட்பவரல்லவா? பதில் கொடுத்தார். பிள்ளைகளைப் பெற்றெடுத்தாள். எனக்கு அன்பான சகோதரிகளே உங்கள் அழுகையின் சத்தம் அன்பர் இயேசுவுக்கு கேட்காமலில்லை. பதில்கண்டு அன்னாளைப் போல பிள்ளையோடு தேவ சமூகத்தில் காணப்படுவீர்கள்.

தாவீது ராஜாவைப் போல நீங்களும் சொல்வீர்கள் 'கர்த்தர் என் அழுகையின் சத்தத்தைக் கேட்டார்' என்பதாக.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







❒ போதகர் வை.தேவதாஸ்

எனக்கு அருமையான வாலிப சகோதர சகோதரிகளே, இணையற்ற இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்கள் அனைவருக்கும் எனது அன்பின் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். அத்தோடு அனல் சஞ்சிகையை வாசிக்கிற அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள் உரித்தாகுவதாக.

எப்படி இருக்கிறீர்கள்? குறிப்பாக உங்கள் சரீர சுகம் எப்படியுள்ளது? நிச்சயம் ஆண்டவர் உங்களுக்கு நல்ல சுக பெலத்தை தந்தருள்வாராக.

வாலிபர் பகுதியில் சிம்சோனைக் குறித்த தொடர் வேத பாடங்களை கற்று வருகின்றோம். ஒவ்வொரு தொடர்களையும் வாஞ்சையோடு கற்று வருகின்றீர்களா? கடந்த இதழில் சிம்சோனின் விழுகையைக் குறித்து தியானித்தோம். குறிப்பாக 'காதலுக்கும்; காமத்திற்கும் இடையே உள்ள வேறுபாட்டினை' எழுதியிருந்தோம். வாசித்தீர்களா? வாசிக்காதுவிட்டால் கடந்த மாத சஞ்சிகையை வாசிக்க உங்களை உற்சாகப்படுத்துகின்றேன்.

அத்தோடு உங்கள் தனிப்பட்ட வாழ்வில் வேத தியானத்திற்கு தொடர்ந்தும் முக்கியத்துவம் கொடுங்கள். தயவு செய்து வேதத்தை வாசிக்காத, தியானிக்காத நாள் என்று ஒன்று இல்லாதபடி ஒவ்வொரு நாளும் பரிசுத்த வேதாகமத்தை வாசித்து தியானியுங்கள்.

இன்றைய வேதபாடத்திற்குள் செல்ல முன்பாக வேதாகமத்தில் இருந்து ஓர் வசனத்தை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எரேமியா 15:20 உன்னை இந்த ஜனத்துக்கு எதிரே அரணான வெண்கல அலங்கமாக்குவேன்; அவர்கள் உனக்கு விரோதமாக யுத்தம்பண்ணுவார்கள், ஆனாலும் உன்னை மேற்கொள்ள மாட்டார்கள்; உன்னை இரட்சிப்பதற்காகவும், உன்னைத்தப்புவிப்பதற்காகவும், நான் உன்னுடனே இருக்கிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.**

தேவனுடைய பிள்ளைகளே! 'நான் கர்த்தருக்கு முன்பதாக உண்மையாக வாழ்ந்தாலும் எனக்கு எதிர்ப்புக்களும், எதிராளிகளும் தான் பெருகி வருகின்றார்கள்' எனக் கலங்கி நிற்கின்றீர்களா? 'எனக்கு வருகிற எதிர்ப்புகள், எனக்கு விரோதமாக பெருகியிருக்கிற எதிராளிகள் இல்லாமல் போனால் எவ்வளவு நன்றாக இருக்கும்?' என அங்கலாய்கின்றீர்களா?

ஒன்றைப் புரிந்து கொள்ளுங்கள். கர்த்தருக்காக உண்மையாக வாழ்பவர்களுக்கு எதிராளிகள் இருக்கத்தான் செய்வார்கள். எங்கள் வாழ்வில் எதிரிகள் என்றோ, பிரச்சினைகள் என்றோ ஒன்றுமே இருக்காது என தேவன் வாக்கு கொடுக்கவில்லை. மாறாக எதிரிகளோ, பிரச்சினைகளோ எங்களை மேற்கொள்ள முடியாது என்றே தேவன் வாக்குப்பண்ணியுள்ளார்.

**ஆகவே கலங்காதிருங்கள்! உங்களுக்கு விரோதமாக எழும்பும் எதிரிகள் உங்களை மேற்கொள்ள தேவன் ஒரு போதும் விடமாட்டார்.**

*'ஓர் குறிப்பிட்ட வழியில் எனக்குத் தீங்கு செய்யும் பிரச்சினை ஒன்று எனக்கு விரோதமாக தொடர்ந்து வந்து கொண்டே இருந்தது. அப் பிரச்சினையின் வீரியத்தன்மையை அறிந்து கொண்ட ஓர் விசுவாசி என்னைப் பார்த்துச் சொன்னார்: 'பாஸ்ரர் நல்ல விசுவாசத்தோடு பிரச்சினை வரும் வழியைப் பார்த்து சாம்பலை தூவி சபித்து ஜெபம் பண்ணுங்கள். இந்தப் பிரச்சினை இனி வரவேகூடாது' என்று சொன்னார். நான் சொன்னேன்; நல்லது அது உங்கள் விசுவாசம். ஆனால் நான் என்ன விசுவாசிக்கிறேன் என்றால் "உன் பக்கத்தில் ஆயிரம் பேரும், உன் வலது புறத்தில் பதினாயிரம் பேரும் விழுந்தாலும் அது உன்னை அணுகாது. உன் கண்களால் மாத்திரம் நீ அதைப் பார்த்து, துன்மார்க்கருக்கு வரும் பலனைக் காண்பாய்" இவ் வசனத்தின்படி பிரச்சினைகளை நான் காண்பேன். ஆனால் அது என்னை அணுகாது என்று சொன்னேன்.*

ஆம் அருமையானவர்களே, **ஆயிரம் பதினாயிரம் பிரச்சினைகள் எங்களுக்கு விரோதமாக வரலாம். ஆனால் எதுவும் எங்களை அணுக முடியாது என விசுவாசியுங்கள். ஏனெனில் அன்பின் தேவன் நம்மோடு கூட இருக்கிறார் - ஆமென்.**

வாருங்கள் வேத பாடத்திற்குள் நுழைவோம். சிம்சோனின் விழுகைக்கான காரணங்களை சற்று விளக்கமாக உங்களுக்கு எழுதி வருகிறேன். அந்த வகையில் கடந்த இதழில் அவரின் விழுகைக்கான முதலாவது காரணமாக அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்ணாசையின் மயக்கம் நிறைந்த வாழ்க்கை வாழ்ந்தார் எனப் பார்த்தோம். கடந்த இதழில் பகிர்ந்து கொண்டவைகளில் சிலவற்றை சுருக்கமாக பதிவிடுகிறேன் வாசியுங்கள்.

சீறி வந்த சிங்கத்தை ஆட்டுக்குட்டியைப் போல் கிழித்து கொன்று போட்ட சிம்சோன்; தனக்குள் எகிறிக் கொண்டிருந்த காம இச்சையைக் கொல்ல முடியாமல் சீரழிந்து போனார்.

பெண்ணாசையில் சிக்குண்ட மனிதன் சமுதாயத்தில் எவ்வளவு நற்பெயரைப் பெற்றிருந்தாலும் நொடிப்பொழுதே அவை எல்லாவற்றையும் இழந்து விடுகிறான்.

ஒரு மரணமானது கல் நெஞ்சம் கொண்டோரையும் ஒரு கணம் கதி கலங்க வைக்கும். ஆனால் பெண் பிரச்சினையால் மரிக்கும் ஒருவரது மரணத்திற்கு முகம் சுழிப்பவர்களே அதிகம்.

தவறான உறவுகளினால் ஏற்படும் பாவமானது முதலாவது மனச்சாட்சியை வாதிக்கின்றது. பிற்பாடு அது அவரது வாழ்வையே சீரழிக்கிறது.

பாலியல் உணர்வுகளை சரியானபடி நிறைவு செய்வதற்காகவே தேவன் குடும்பம் எனும் பந்தத்தை அதாவது திருமணத்தை ஏற்படுத்தியுள்ளார்.

மோக உணர்ச்சியின் கொந்தளிப்பே திருமணத்திற்கு முன்பதான உடலுறவின் ஏக்கமாகும்.

'நீ தான் எனக்கு வேண்டும்' என்று சொல்கிறார்களோ அந்தளவுக்கு உங்களை அனுபவித்த பின்பு உங்களை வெறுத்துவிடுவார்கள். ஏமாந்து போகவேண்டாம்.

மோக இச்சை ஒரு போதும் திருப்தியளிக்காது. உண்மையான அன்பே திருப்தியைக் கொடுக்கும்.

தேவன் உறவு முறிவுகளை விரும்புகிறவர் அல்ல; மாறாக அவர் இணைந்து செல்வதையே விரும்புகிறார்.

'எப்படி பிரிவது என்று சிந்திக்காமல் எப்படி சேர்ந்து வாழ்வது' என்று முயற்சி எடுங்கள்.

இவைகளே கடந்த இதழின் வாலிபர் வளாகச் செய்தியின் சுருக்கங்கள் ஆகும்.

**சிம்சோனின் விழுகைக்கான இரண்டாவது காரணத்தை இன்று ஆராய்வோம்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 02. திடீரென முன்னேற வேண்டும்; எளிதாக சம்பாதிக்க வேண்டும் என்ற விபரீத ஆசை

இந்த நாட்களில் எல்லோரும் ஏதோ ஒரு விதத்தில் தங்கள் பொருளாதார நிலையை முன்னேற்றுவதற்காக படாதபாடுபடுகின்றனர். ஓர் முச்சக்கர வண்டியின் பின்பதாக 'நீ ஏழையாகப் பிறந்தது தவறில்லை; ஆனால் ஏழையாக மரிப்பதே தவறு' என்று ஒரு வாசகம் எழுதியிருந்தது. உண்மைதான், ஆனால் அந்த ஏழ்மை நிலையை மாற்றுவதற்கு எவ்வாறான முயற்சிகளை இந்த உலக ஜனங்கள் எடுக்கின்றார்கள் என ஆராய்ந்து பார்த்தால் பெரும்பாலும் அவ் முயற்சிகள் அருவருக்கப்படத்தக்கவைகளாகவே காணப்படுகின்றது.

இன்றைய நவீன உலகத்தில் எதற்கெடுத்தாலும் பணமே தேவைப்படு கின்றது. இப் பணத்தை சம்பாதிப்பதற்காகவே பலரும் பல விதங்களில் அலைந்து திரிகின்றனர். பணம் சம்பாதிப்பது எனும் பொழுது அதிகமாக சம்பாதிக்க வேண்டும், இலகுவாக சம்பாதிக்க வேண்டும் என்ற முயற்சியே பலரிடமும் காணப்படுகின்றது.

*தற்பொழுது எமது நாட்டில் ஓர் நாள் கூலிச் சம்பளமாக ஏறத்தாள ரூபா 1500 தொடக்கம் ரூபா 2000 வரை காணப்படுகிறது. கூலி வேலை செய்யக்கூடிய ஒருவர் வேலையில்லாமல் பல நாட்கள் வீட்டில் இருந்ததைப் பார்த்த நான், குறிப்பிட்ட ஓர் கடையில் வேலைக்குச் சென்றால் ஒரு நாள் சம்பளமாக ரூபா 1500 கிடைக்கும். அந்த வேலைக்குச் செல்வீர்களா? எனக்கேட்ட பொழுது அவர் சொன்னார்; இந்த 1500இற்கு நாள் முழுவதும் கடையில் நிற்பதைவிட ஒரு சில மணித்தியாலங்களிற்குள் பல ஆயிரம் ரூபாக்களை உழைத்துவிடுவேன் என்று. அவர் சொல்லும் உழைப்பு சட்டத்திற்கு விரோதமானது. இன்றைய கால சூழ்நிலையில் எதைச் செய்தாவது பணத்தை சம்பாதிக்க வேண்டும் என்பதிலேயே அனைவரும் குறியாக இருக்கின்றார்கள்.*

ஆகையினால் தான் போதை வியாபாரங்கள் பெருகிவிட்டன. கள்ளக் கடத்தல்கள் கட்டுக்கடங்காதபடி செல்கின்றன. பணத்திற்காக கற்புகள் விலை போகின்றன. பிள்ளைகளை விற்பனை செய்யும் பெற்றோர் பெருகிவிட்டனர். எப்படியாவது வெளிநாடு சென்று சம்பாதித்துவிட வேண்டும் என பலரும் துடியாய் துடிக்கின்றனர்.

**சங்கீதம் 37:35 கொடிய பலவந்தனான ஒரு துன்மார்க்கனைக் கண்டேன்; அவன் தனக்கேற்ற நிலத்தில் முளைத்திருக்கிற பச்சைமரத்தைப்போல் தழைத்தவனாயிருந்தான்.**

துன்மார்க்க செயல்களில் ஈடுபட்டு, பலவந்தம் பண்ணி பச்சை மரத்தைப் போல் தழைக்க முடியும். சீரக்கிரமாக வளர வேண்டும், முன்னேற வேண்டும் என உலக ஜனங்கள் நினைக்கலாம். திடீரென மாடி வீடு கட்ட வேண்டும், வாகனங்களை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாங்க வேண்டும், வியாபாரங்களைப் பெருக்க வேண்டும், நகை நட்டுக்கள் சேர்க்க வேண்டும், வங்கியில் வைப்பு தொகை சரியாக பேணப்பட வேண்டும் என பல விதங்களில் நீங்கள் சிந்தித்துக் கொண்டிருக்கலாம். குறிப்பாக வாலிப பருவத்தில் இவ் எண்ணங்கள் இன்னும் அதிகமாய் தலை தூக்கும். நாங்களும் மற்றவர்களுக்கு இணையாக வாழ வேண்டும், நாங்களும் யாரிலும் குறைந்தவர்கள் அல்ல என்ற எண்ணம் உங்களிடம் காணப்படலாம்.

*சமீபத்தில் ஓர் ஏழை வாலிபன் தனது நண்பர்களுக்கு பிறந்த நாள் பரிசாக அதி விலைகூடிய கைத்தொலைபேசியை அன்பளிப்பு செய்வதற்காக தனது சிறுநீரகத்தை விற்றான் என்ற செய்தியை நீங்கள் ஊடகங்கள் ஊடாக அறிந்திருப்பீர்கள்.*

எப்படியாவது நாங்கள் மற்றவர்களுக்கு ஈடாக வாழ வேண்டும் என்ற துடிப்பே இச் செயல்களின் காரணமாகும். துன்மார்க்கத்தனத்தில் செழிப்பை பெற்றவனின் முடிவைக் குறித்து வேதாகமம் சொல்வதைக் கவனியுங்கள்.

**சங்கீதம் 37:36 ஆனாலும் அவன் ஒழிந்து போனான்; பாருங்கள், அவன் இல்லை; அவனைத் தேடினேன், அவன் காணப்படவில்லை.**

அநியாயமான முறையில் எமது பொருளாதார வாழ்வு செழிக்கும் பொழுது அது நிலைத்திருக்காது. எவ்வளவுக்கு வேகமாக செழித்தோமோ அதே வேகத்தில் பட்டுப்போய்விடுவோம்.

ஏனெனில், **நீதிமொழிகள் 20:21 ஆரம்பத்திலே துரிதமாகக் கிடைத்த சுதந்திரம் முடிவிலே ஆசீர்வாதம் பெறாது**. என வேதாகமம் சொல்கிறது.

எனவே நாம் செய்யும் தொழிலிலோ அல்லது வேறு என்ன காரியமானாலும் உடனடியாக முன்னேற வேண்டும் என நினைப்பது ஆபத்தானதே.

ஒரு வேளை இதனை வாசிக்கின்ற நீங்கள் ஓர் தேவ ஊழியராகக் கூட இருக்கலாம். உங்கள் ஊழியத்தின் பலனை உடனடியாக எதிர்பார்த்து சோர்ந்து போக வேண்டாம். அவருடைய ஊழியம் வளர்ந்து விட்டது; இவருடைய ஊழியம் வளர்ந்துவிட்டது என மற்றவர்களுடைய ஊழியங்களைப் பார்த்துப் பயப்பட வேண்டாம். **ஊழியத்தை உங்கள் இரத்தம் சிந்தி செய்ய வேண்டும் என்பது உண்மை தான், இருப்பினும் அதன் பலனைத் தருபவர் கர்த்தர் என்பதே என்பதை மறக்க வேண்டாம். நிச்சயம் உங்கள் பிரயாசத்திற்கு தக்க பலனை அவர் தருவார்.**

இப்படியிருக்க தேவ பிள்ளைகளாகிய நாம் எப்படி முன்னேற வேண்டும் என்பதையும் பரிசுத்த வேதாகமம் சொல்கின்றது. படித்துப்பாருங்கள்;

**சங்கீதம் 37:34 நீ கர்த்தருக்குக் காத்திருந்து, அவருடைய வழியைக் கைக்கொள்; அப்பொழுது நீ பூமியைச் சுதந்தரித்துக் கொள்வதற்கு அவர் உன்னை உயர்த்துவார்; துன்மார்க்கர் அறுப்புண்டுபோவதை நீ காண்பாய்.**

கர்த்தரின் நாமத்தினாலே நீங்கள் பொறுமையாக காத்திருக்க வேண்டும் என தேவன் எதிர்பார்க்கிறார். இது உங்களுக்கு சிரமமாகத்தான் இருக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பினும் நீங்கள் பொறுமையாக முன்னேறும் பொழுது எல்லாவற்றையும் சுதந்தரிக்கும் அளவிற்கு தேவன் உங்களை உயர்த்துவார்.

*ஓர் சகோதரன் மிகுந்த கஸ்ரத்தில் இருந்து ஜெபத்துடன் ஓர் வாகனத்தை எடுத்து தொழில் ஆரம்பித்தார். தேவ கிருபையால் தொழிலும் ஆசீர்வதிக்கப்பட்டது. இருப்பினும் இச் சகோதரனுக்குள் ஓர் மேலதிக ஆசை உருவானது. இன்னுமொரு வாகனத்தை எடுத்தால் இன்னும் அதிகமாக சம்பாதிக்கலாமே என்று. ஆனால் வாகனம் வாங்குவதற்கோ பணம் இல்லை. இருப்பினும் சம்பாதிக்க வேண்டும் என்ற ஆசையில் கடன் பெற்று வாகனம் கொள்வனவு செய்து தொழில் ஆரம்பித்தார். இருப்பினும் அவர் பெற்றுக் கொள்ளும் வருமானத்தைவிட கடன் பெற்றுக் கொண்டால் அதை செலுத்தி முடிக்க முடியாது வாகனத்தையும் இழந்து, தொழிலையும் இழந்து பழைய நிலைக்குத் தள்ளப்பட்டார்.*

பாருங்கள், பொறுமையுடன் ஒரு வாகனத்துடன் தொழிலைச் செய்து கொண்டு பணத்தை சேமித்த பின்பு இன்னொரு வாகனத்தை வாங்கியிருந் திருக்கலாம். ஆனால் அவரோ அவசரப்பட்டு எல்லாவற்றையும் இழந்து போனார். எனவே எதுவாயினும் மெதுவாக முன்னேறுங்கள். அப்பொழுது எல்லாவற்றையும் சுதந்தரிக்கும் பெலனை கர்த்தர் தந்தருள்வார்.

**நீதிமொழிகள் 21:5 ஜாக்கிரதையு ்ளவனுடைய நினைவுகள் செல்வத்துக்கும், பதறுகிறவனுடைய நினைவுகள் தா ்.ந்திரத்துக்கும் ஏதுவாகும்.**

இவ் வசனத்தினை இன்னொரு மொழி பெயர்ப்பில் இவ்வாறு மொழி பெயர்த்துள்ளார்கள்: **'அவசரச் செயல் வறுமையைக் கொடுப்பது நிச்சயம் போலவே, கடின உழைப்புள்ளவர்களின் திட்டங்கள் இலாபத்தைக் கொடுப்பது நிச்சயம்'.**


**எந்தக் காரியமானாலும் குறிப்பாக தொழில் ரீதியான காரியங்களில் அவசரப்படாமல் ஜாக்கிரதையுள்ளவர்களாய் இருங்கள். ஏனெனில் அவசரமாகச் செய்கின்ற செயல்கள் எல்லாம் எம்மை வறுமையிலேயே கொண்டு போய் முடிக்கும். கடினமாக உழையுங்கள்; அதற்காக அவசரப்படாதிருங்கள்.**

**என்ன வாசகர்களே! இதுவரை உங்களுடன் பகிர்ந்து கொண்ட விடயங்கள் உங்களுக்கு பிரயோசனமாக இருந்ததா? உங்கள் கருத்துக்களை எதிர்பார்த்திருக் கின்றோம். தொலைபேசி மூலமாகவோ, கடிதம் மூலமாகவோ தெரியப்படுத்த மறவாதிருங்கள்.**

**அத்தோடு சிம்சோன் எங்கே எளிதாக சம்பாதிக்க வேண்டும் என நினைத்தார்? அதனைக் குறித்து நீங்கள் ஒன்றும் எழுதவில்லையே என நீங்கள் சிந்திப்பீர்கள். இன்னும் அவ் விடயத்திற்குள் நாம் இறங்கவில்லை என்பது உண்மையே. கர்த்தருக்குச் சித்தமானால் அடுத்த இதழில் அதனைக் குறித்து உங்களுடன் பேசுகிறேன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நன்மை செய்ய படியுங்கள்

❒ திருமதி. J.பிலிப்




2021ஆம் ஆண்டின் இறுதி நாட்களுக்குள் வந்திருக்கும் சகோதர சகோதரிகளே, இவ் ஆண்டு அனேகருடைய வாழ்க்கையில் துன்பம், துயரம், இழப்புக்கள் என பல இன்னல்களுக்குள் நீங்கள் கடந்து வந்திருக்கலாம். **ஆனால் ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் தேவன் உங்களுடன் இருந்தார் என்பதை மறந்து போகவேண்டாம்.**

சகோதரிகளே இன்றைய உலகத்திலே அனேக படிப்புகள் உண்டு. படித்தால் தான் நல்ல தொழில், சிறந்த எதிர்காலம் உண்டு என்று அனேகர் கூறுவார்கள். உண்மை தான். ஆனால் உலகப் படிப்புக்கள் எல்லாம் உன் வாழ்க்கை ஒரு நாள் முடியும் போது அவையும் உன்னுடன் மண்ணோடு மண்ணாகிவிடும். உன் படிப்பு உன் கூட வரப்போவதில்லை.

எனது வயது 60ஐ கடந்துவிட்டது இனியும் எனக்கு ஒரு படிப்பா? ஆம்! நீ படிக்க வேண்டிய ஒரு பாடம் உண்டு. அது தான்

**ஏசாயா 1:17a நன்மைசெய்யப் படியுங்கள்.**

இப்பாடத்தை நீ படிக்கத்தான் வேண்டும் என்று உன் தேவன் விரும்புகிறார்.

ஏன்? இந்தப்படிப்புத்தான் உன்னுடன் கூட வரப்போகிறது.

எப்போ? நீ உன் தேவனைச் சந்திக்கும் நாளில் இதை நீ காண்பாய்.

**111யோவான் 11b நன்மைசெய்கிறவன் தேவனால் உண்டாயிருக்கிறான்; தீமை செய்கிறவன் தேவனைக் காண வில்லை.**

நீ தேவனைக் காண வேண்டும் என்றால் 'நீ நன்மை செய்ய வேண்டும்'. எங்கே நான் சென்று இதைப் படிப்பது, யாரிடத்தில் கற்றுக் கொள்ள லாம் என்று யோசிக்கிறாயா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்மை செய்யப்படிப்பிக்கிறவர் ஒருவர் உண்டு. அவர் தான் உன்னைத் தேடி வந்த உன் ஆண்டவர் இயேசு.

**அப்போஸ்தலர் 10:38 நசரேயனாகிய இயேசுவைத் தேவன் பரிசுத்தஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம்பண்ணினார்; தேவன் அவருடனேகூட இருந்தபடியினாலே அவர் நன்மைசெய்கிறவராயும் பிசாசின் வல்லமை யில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவரா யும் சுற்றித்திரிந்தார்.**

சகோதரியே நீ நன்மை செய்ய வேண்டும் என்றால் இயேசுவைப் பின்பற்றி ஆவிக்குரிய வாழ்க்கையில் முன்னேறி பரிசுத்த ஆவியின் வல்லமையினால் அபிஷேகம் பண்ணப்பட வேண்டும். அப்போது உன் தேவன் உன்னுடன் கூட இருப்பார். அப்போது நீ செய்யும் நன்மைக்குப் பலன் உண்டு. ஏற்ற சமயத்தில் நீ பலனைப் பெற்றுக்கொள்வாய்.

**நீதிமொழிகள் 11:27a நன்மையை ஜாக்கிரதையுடன் தேடுகிறவன் தயையைப் பெறுவான்.**

படிக்கும் மாணவர்கள் ஆசிரியர் கற்பிக்கும் பாடங்களை ஜாக்கிரதையுடன் கேட்டுப் படித்தால் பரீட்சையில் நல்ல பலனைப் பெறுவார்கள்.

அப்படியே சகோதரியே, நீயும் இயேசு உனக்கு கற்பிக்கும் பாடங்களை ஜாக்கிரதையுடன் கேட்டுப் படித்தால் நீயும் நன்மை செய்யக் கற்றுக்கொள்வாய். அப்போ நீ நிச்சயம் தேவனைக் காண்பாய். எங்கே படிக்கலாம்? ஞாயிறு ஆராதனையின் செய்தி மூலம், பெண்கள் ஜெபக் கூட்டத்தில், வேதப்படிப்பு நேரங்கள், தனிப்பட்ட வேத வாசிப்பு இவற்றிற்கூடாக நீ எப்படி நன்மை செய்யலாம் என்பதை அறிந்து கொள்வாய். இவற்றிற்கு நீ உன் வாழ்க்கையில் முதலிடம் கொடுக்காவிட்டால் நீ நன்மையைக் குறித்துக் கற்றுக்கொள்ளமாட்டாய்.

நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இப் பூமியில் வாழ்ந்த நாட்களில் தீமையை யோசித்ததில்லை, பேசியதில்லை, செய்ததில்லை.

**ரோமர்16:19b ஆனாலும் நீங்கள் நன்மைக்கு ஞானி களும் தீமைக்குப் பேதை களுமாயிருக்க வேண்டு மென்று விரும்புகிறேன்.**

2021ஆம் ஆண்டின் கடைசி அனலின் பெண்கள் பக்கத்தை வாசிப்பவர்களே, புதிய வருடத்தில் தீர்மானத்தை எடுப்பதைவிட இப்போது இதை வாசித்து முடித்தவுடன் எங்கள் வாழ்க்கையை ஆராய்ந்து பார்ப்பது நல்லது. இன்று அனேகர் உலகப் படிப்பிற்கு முதலிடமும் தேவனுடைய வார்த்தையை படிப்பதில் அலட்சியமும் காண்பிக்கிறார்கள். இதனால் தான் நம்மில் அனேகர் நன்மையைக் கற்றுக் கொள்ள முடியவில்லை.

இன்றைய கால கட்டத்தில் அனேக வாலிபப்பிள்ளைகள் ஞாயிறு ஆராதனையை மறந்து அந் நேரத்தில் உலகப் படிப்பிற்காக செல்கிறார்கள். நன்மையை படிக்க வேண்டிய நேரத்தில் உலக காரியங்களின் மேன்மையை நாடி படிக்கிறார்கள். அதனால் தான் வேதம் நமக்கு எச்சரிக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ரோமர் 14:16 உங்கள் நன்மை தூஷிக்கப்பட இடங்கொடாதிருங்கள்.**

நன்மை எப்படி தூஷிக்கப்படும்? நீ தீமையை யோசித்து, தீமையைக் கேட்டு, தீமையைப் பேசி, தீமையை நடப்பித்தால் நன்மை தூஷிக்கப்படும் என்பதை மறந்து போகாதே.

**நீதிமொழிகள் 14:22b நன்மையை யோசிக்கிறவர்களுக்கோ கிருபையும் சத்தியமுமுண்டு.**

இதனால் நீங்கள் தீமையை வெறுத்து நன்மையை சிந்தியுங்கள். அப்போது தேவ ஆசீர்வாதம் உங்களுடன் இருக்கும்.

**11கொரிந்தியர் 5:10 ஏனென்றால், சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையம்படிக்கு, நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்படவேண்டும்.**



# வினா விடை - 106

01. 'என் கண்ணீரே எனக்கு உணவாயிற்று' என்றது யார்?

02. 'அந்நிய தேவர்களைத் தங்கள் நடுவிலிருந்து விலக்கிவிட்டு, கர்த்தருக்கு ஆராதனை செய்தார்கள்' யார்?

03. மிகுந்த ஆடம்பரத்தோடு நியாயஸ்தலத்தில் பிரவேசித்து பவுலின் பிரசங்கத்தைக் கேட்ட ராஜாவும் ராணியும் யார்?

04. 'தொலைந்து போ, தொலைந்து போ' என்று தூஷிக்கப்பட்டது யார்?

05. பத்து அப்பங்களையும் பணியாரங்களையும்.... ஒரு தீர்க்கதரிசிக்கு கொடுக்க கொண்டுபோன ஸ்திரீ யார்?

06. 'இளவயதும் வாலிபமும் மாயையே' என்றவர் யார்?

07. 'என் பானங்களை கண்ணீரோடே கலக்கிறேன்' என்றது யார்?

08. 'பஸ்காவை ஆசரிக்கத் தகாதவர்களாயிருந்தார்கள்' என வாசிப்பதெங்கே?

09. கற்பாறை உச்சியில் தேவனாகிய கர்த்தருக்கு தன் வேலையாள்கள் பத்துப்பேரைக் கொண்டு ஒரு பலிபீடத்தைக் கட்டினவன் யார்?

10. தேவாலயத்தில் நாடோறும் தேவனைப் புகழ்ந்து துதித்துக் கொண்டிருந்தவர்கள் யார்?



**சரியான விடை எழுதியவர்களில்**
**பாராட்டுக்குரியவர்களாக தெரிவு செய்யப்பட்டிருப்பவர்கள்:**

**வினாவிடை - 105**
**வி. அனுராதா**
**(காரைநகர்)**



**குறுக்கெழுத்துப் போட்டி - 103**
**குகன் குடும்பம்**
**(கனடா)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




❑ ஜசிந்தா அக்கா




சோம்பேறி மனிதன் ஒருவன் இருந்தான். அவன் தன் உணவுக்காக எப்போதும் எளிய வழியைத் தேடுவான். ஒரு நாள் உணவு தேடிக்கொண்டே சென்றான். செல்லும் வழியில் ஒரு பழத்தோட்டத்தைக் கண்டான். சுற்றும் முற்றும் பார்த்தான். காவலுக்கு யாரும் இருப்பது போன்று தெரியவில்லை என்று விரைவாகப் பழத்தை திருட முடிவு செய்தான். அவன் மரத்தில் ஏற ஆரம்பித்ததும் தோட்டக்காரன் அவனைப் பிடிக்க ஓடி வந்தான். அவன் தடியுடன் வருவதைக் கண்ட சோம்பேறி மிகவும் பயந்து அருகில் உள்ள காட்டை நோக்கி ஓடினான். தப்பித்துக் கொண்டான்.

காட்டில் நடந்து செல்லும் போது இரண்டு கால்கள் உள்ள நரி ஒன்றைக் கண்டு மிகவும் ஆச்சரியப்பட்டு இது எப்படி மகிழ்ச்சியாய் இருக்கிறது. உயிர் வாழ்வது கடினம், ஓட முடியாது, மற்றைய மிருகங்களிலிருந்து தன்னைப் பாதுகாக்க முடியாது, தனக்குத் தானே உணவும் தேடி எடுக்க முடியாதே... ஐயோ... பாவம் என்று நினைத்தான். அவ்வாறு நினைத்துக் கொண்டிருக்கும் போதே சிங்கம் ஒன்று வாயில் இறைச்சித் துண்டோடு நரியை நோக்கி வருவதைக் கண்டான். சிங்கத்தைக் கண்ட எல்லா விலங்குகளும் ஓடி மறைந்தன. சோம்பேறி மனிதனும் தன்னைக் காத்துக் கொள்ள மரத்தின் மீது ஏறிக் கொண்டான். ஆனால் அவன் இருதயம் நரிக்காக அங்கலாய்த்தது. ஐ...ஐ...யோ... நரி அங்கேயே இருக்கிறதே. தன் இரு கால்களாலும் ஓட முடியாதே என்று மனம் வருந்தினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் ஒரு அதிர்ச்சியான காட்சி அவனை அதிரவைத்தது. அது, சிங்கம் தன் வாயிலிருந்த இறைச்சித் துண்டுகளை நரிக்குக் கொடுத்தது. நரி போஷிக்கப்பட்ட விதத்தைப் பார்த்த சோம்பேறி தன்னையும் இவ்வாறு ஆண்டவர் போஷிப்பார் என்று நினைத்துக் கொண்டு வீதியோரம் நடந்து வந்தான். வழியில் இருந்த மரத்தடியில் அமர்ந்து கொண்டான். வீதியையே பார்த்துக் கொண்டிருந்தான். இரண்டு நாட்களாகியும் சோம்பேறி மனிதனுக்கு யாரும் உணவு கொடுக்கவில்லை.

அவனால் பசி தாங்க முடியாமல் நடக்க ஆரம்பித்தான். வழியில் ஒரு ஞானியைக் கண்டான். ஞானியிடத்தில் நடந்த சம்பவம் அனைத்தையும் விவரித்தான். முதலில் ஞானி அவனுக்கு தண்ணீரும் உணவும் கொடுத்தார். அதை உண்ட சோம்பேறி ஞானியே முடங்கிய நரிக்கு ஆண்டவர் கருணை காட்டியிருந்தார். ஆனால் ஆண்டவர் ஏன் எனக்கு மட்டும் கொடூரமாய் இருந்தார்? என்று கேட்டான். புன்னகைத்த ஞானி தேவனுடைய திட்டத்தை நீ சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. நீ நரியைப் போல இருக்க வேண்டும் என்று ஆண்டவர் விரும்பவில்லை. நீ சிங்கத்தைப் போல மற்றவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்றே விரும்புகிறார் என்றார்.

இயேசப்பாவின் அன்பான செல்லப் பிள்ளைகளே தேவையில் இருப்போருக்கு உதவி செய்ய ஆயத்தமா?

**அப்போஸ்தலர் 20:35 வாங்குகிறதைப்பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம்.**

## குறுக்கெழுத்துப் போட்டி – 103

### சரியான பதில்கள்

**இடமிருந்து வலமாக**

01. அப்னேர் – 1இராஜா 2:5
03. ஆசகேல் – 11இராஜா 8:13
06. ஈகால் – எண் 13:17
08. நாகோர் – ஆதி 11:29
10. சிதேக்கியா – 11நாளா 18:10

**வலமிருந்து இடமாக**

01. அபினதாப் – 1சாமு 7:1
04. நெகேமியா – நெகே 6:14
07. யாக்கோபு – ஆதி 35:15
09. எலிபேலேத் – எஸ்றா 8:13
12. நேபுகாத்நேச்சார் – தானி 2:12

**மேலிருந்து கீழாக**

01. அகித்தோப்பேல் – 11சாமு 15:31
02. ஆத்துமாவை – நீதி 19:8
05. எபிரோன் – நியாயா 1:20

**கீழிருந்து மேலாக**

05. எஸ்தர் – எஸ்தர் 4:16
09. எலெயாசார் – 1நாளா 11:13
11. புத்திமதியை – நீதி 4:13

## குறுக்கெழுத்துப் போட்டி - 103, வினா விடை - 105

### சரியான விடை எழுதியவர்கள்

**கனடா**
01. குகன் குடும்பம் +

**காரைநகர்**
02. வி.அனுராதா

* வினாவிடை மட்டும் சரியாய் எழுதியோர்
\+ குறுக்கெழுத்துப்போட்டி மட்டும் சரியாய் எழுதியோர்
இரண்டும் சரியாய் எழுதியோர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# ஜார்ஜ் முல்லர்

## 1805 - 1898

## விசுவாசத்தில் வளருங்கள்...

வேதாகமத்தை முழுமையாக நீங்கள் வாசித்தது உண்டா? விசுவாச வீரன் ஜார்ஜ் முல்லர் வாசித்திருக்கிறார். ஒன்று, இரண்டு முறை அல்ல. இருநூறு முறைகள். நம்ப முடியவில்லையல்லவா? அதிலும் நூறு முறைகள் முழங்கால் ஊன்றியே வாசித்திருக்கிறார்.

விசுவாசத்தினாலேயே வெற்றி கண்ட மாமனிதர்; ஆண்டவர் பயன் படுத்திய அற்புதப் பாத்திரம்; அனாதைகளின் அருமைத் தந்தை; ஜெபத்திலே சிறந்தவர்; ஆண்டவரின் நாம மகிமைக்காக அரும்பெரும் செயல்கள் செய்தவர் இவர்.

வாழ்வில் ஒளி இழந்தோர்க்கு வழி காட்ட அனாதை இல்லங்களைக் கட்டினார். ஆயிரமாயிரம் குழந்தைகள் இதனால் எதிர்காலம் பெற்றனர். விசுவாசத்தினால் அன்றாடத் தேவைகளை ஆண்டவரிடமிருந்தே பெற்றார்.

முல்லரின் பல்வேறுபட்ட நிறுவனங்களில் 1,21,683 மாணவ மாணவியர் பயின்றனர். வேத அறிவு நிறுவனங்களும், பள்ளிக்கூடங்களும் இவரால் நிறுவப்பட்டன.

தன்னுடைய 70 வயதிற்குப் பிறகு 17 மிஷனெரிப் பயணங்களை மேற்கொண்டார். 42 நாடுகளைச் சுற்றி இருபது இலட்சம் மைல்கள் நிலத்திலும்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீரிலும் கடந்து ஆயிரக்கணக்கான பிரசங்கங்களைச் செய்து ஏறக்குறைய முப்பது இலட்சம் மக்களுக்கு கிறிஸ்துவின் அன்பை எடுத்துரைத்தார்.

தேவைகள் நிறைந்த பொழுது இவர் மனிதரை நாடியதில்லை. தேவனையே சார்ந்திருந்தார். உலகமெங்கும் நற்செய்தி அறிவிக்க 189 மிஷனெரிகளை 'உலக நற்செய்தி மிஷன்' என்ற தமது நிறுவனத்தின் மூலம் தாங்கினார்.

அனாதைகளின் தந்தையாய், ஆதரவற்றோரின் அடைக்கலமாய் வாழ்ந்த ஜார்ஜ் முல்லர் தனது 93ஆம் வயதில் நித்திய வாழ்வைப் பெற்றார்.

**அன்பரே! உமது விசுவாசம் மனிதரிடத்தில் உள்ளதா? இறைவனைச் சார்ந்து உள்ளதா?**

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு: அவர் உன்னை அழைக்கிறார். ஆதலால் பொன் திறவுகோல் கொண்டு அவர் காட்டும் தூய இடத்தில் பிரவேசி. — ஜார்ஜ் முல்லர்.**

**நன்றி: "மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்" மார்ச் 10**

---

# குளோரிந்தாள் - 1806

## தடைகள் தகரட்டும்



இந்தியாவைச் சமயங்களின் சங்கமம் என்று அழைக்கலாம். ஏனெனில் பல சமயங்கள் இந்தியாவிலிருந்தே தோற்றுவிக்கப்பட்டன. அதே வேளையில் இந்தியாவை மூடத்தனங்கள் நிறைந்த நாடு என்று கூடக் கூறமுடியும். ஏனெனில் ஒரு காலத்தில் உலகத்தில் எவ்வித பாகங்களிலும் நடைபெறாத கொடிய சம்பவங்கள் இங்கே நடந்ததுண்டு.

சதி, உடன்கட்டை ஏறுதல், குழந்தைத் திருமணம், பெண்கல்வி மறுத்தல் இன்னும் பல இதற்கு உதாரணங்களாகும். அப்படிப்பட்ட ஒரு நிகழ்ச்சி இது.

ஒரு அழகிய இளம்பெண். கணவன் இறந்துவிட்டான். பிணத்தோடு சேர்த்து அவளையும் சுட்டெரிக்க இழுத்துச் செல்லப்பட்டாள். இதனை அறிந்த கர்னல் லிட்டில்டன் விரைந்து சென்று அவளைக் காப்பாற்றினார். ஆனால் ஊரார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளை ஏற்றுக்கொள்ளவில்லை. இறுதியில் லிட்டில்டன் அவளை தம்முடன் அழைத்துச் சென்றார். அப்பெண்ணே கோகிலா என்ற குளோரிந்தாள் ஆவார்.

கிறிஸ்தவ சித்தாந்தங்களை லிட்டில்டன் பிரபு மூலம் அறிந்து கொண்ட குளோரிந்தாள் ஞானஸ்நானம் பெற விரும்பி சுவார்ட்ஸ் ஐயரிடம் புதுபிறப்பு அடைந்தாள். அன்று முதல் காண்பவரிடமெல்லாம் கிறிஸ்துவைப் பற்றிக் கூறி ஆத்தும ஆதாயப்பணியைச் செய்தார். 1780ஆம் ஆண்டு 40 பேர் இவரால் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டனர்.

கர்த்தருக்கென்று ஒரு ஆலயம் கட்ட விரும்பிய குளோரிந்தாள் அம்மையார் 1785ஆம் ஆண்டு நெல்லையில் முதல் ஆலயத்தைக் கட்டினார். சிறு பள்ளிக்கூடத்தையும் ஆரம்பித்தார்.

ஆசாரம் மிக்க பிராமணக் குடியில் பிறந்து, சாதி ஆசாரங்களைத் தகர்த்து, ஏழை ஏளியவர்களுடன் சமமாகப் பழகி, அவர்களுக்குப் பண உதவி அளித்து, அவர்கள் ஆன்ம முன்னேற்றத்திற்காக உழைத்து, தனக்கென ஒரு முத்திரையைத் திருச்சபை வரலாற்றில் பதித்த குளோரிந்தாள் நமக்கு ஓர் தூண்டுகோல்.

**அன்பரே! சாதி மதங்களைக் கடந்து, கிறிஸ்துவை பிறர்க்கு அறிவிப்பவரா நீங்கள்?**

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு: உன் ஓய்வினை சீக்கிரம் எடுத்துக் கொள்ளாதே. எடுத்துக் கொண்டால் உனது உண்மை ஓய்வினை நீ அடைய முடியாது. — ஜான் பிரவுன்**

**நன்றி: "மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்" மார்ச் 3**

---

## சரியான பதில்கள் வினாவிடை 105

01. முப்பது நாட்கள் - எண்ணாகமம் 20:27-30
02. ஈசாக்கும் இஸ்மவேலும் - ஆதியாகமம் 25:7-9
03. நாகமான் - 11இராஜா 5:15
04. மோசே - யாத்திராகமம் 18:6-8
05. உல்தாள் - 11இராஜா 22:14
06. சாலொமோன் - பிரசங்கி 3:17
07. தாவீது - யோனத்தான் - 1சாமுவேல் 20:41
08. சாறிபாத் ஊர் விதவை - 1இராஜா 17:24
09. கர்த்தருடைய தூதனானவர் - ஆதி 22:11-12
10. ரூத், அபிகாயில் - ரூத் 2:10, 1சாமுவேல் 25:23

---

# இந்த நொடியை அவிழுங்கள் பார்க்கலாம்!

**'ஒன்று உண்டு, அதை செய்வேன் என்று சொல்லாமலிருந்தால் பாவமேயல்ல. ஆனால் செய்வேன் என்று சொல்லி அதை செய்யாமல் போனால் பாவம். அதை சொன்னவன் கையிலே கேட்கப்படும்' அது என்ன?**

*இதற்கான விடையையும் எழுதி அனுப்பி பாராட்டைப் பெற்றுக் கொள்ளுங்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | | | | | | 02 |
| | | 03 | | | | | | |
| | | | | | | | | 04 |
| | | | | | | | | 05 |
| | | 06 | | | | | | |
| | | | 07 | | | | | |
| | 08 | | | | | | 09 | |
| 12 | | | | | | 11 | 10 | |
| 13 | | | | | | | | 14 |

**இடமிருந்து வலமாக**

## குறுக்கெழுத்துப் போட்டி 104

01. இல்க்கியாவின் குமாரன்
03. 'கட்டளையை காத்துக் கொள்ளுகிறவன் தன் ........... காக்கிறான் ...............'
06. 'என் ........................ உமது கரத்திலிருக்கிறது'
07. 'நான் உங்கள் ஒவ்வொருவனுடைய வலது கண்ணைப் பிடுங்கி, இஸ்ரவேல் மேல் நிந்தையை வரப்பண்ணுவேன்' என்றவன்
13. 'மகிமை இஸ்ரவேலை விட்டுப் போயிற்று' என பொருள்படும்.

**வலமிருந்து இடமாக**

02. இவள் வெறித்திருக்கிறாள் என ஏலி நினைத்தான்
04. இவன் மனாசே சந்ததிக்குச் சேனாதிபதி
05. தன் நாவினால் ................... பேசுகிறவனைப் பார்க்கிலும் கடிந்து கொள்ளுகிறவன் முடிவில் அங்கீகாரம் பெறுவான்
09. இவன் இஸ்ரவேல் புத்திரரில் உண்டான வாதையை நிறுத்தியவன்
11. கீரியாத்யாரீமில் உடன்படிக்கைப் பெட்டியை காக்கும்படி பரிசுத்தப்படுத்தப்பட்டவன்
14. தளபாடங்களுக்குள் மறைந்திருந்தவன்

**மேலிருந்து கீழாக**

01. இவன் எப்பிராயீம் மலைத்தேசத்திலிக்கிற ராமதாயீம் ஊரைச் சேர்ந்தவன்
03. 'யெகோவாயீரே' என்று பேரிட்டவன்
04. சவுலும் யோனத்தானும் இதைவிட வேகமானவர்கள்

**கீழிருந்து மேலாக**

08. யோவேல், அபியா என்பவர்கள் இங்கே நியாயாதிபதிகளாயிருந்தனர்
10. 'ஒரு நரி ஏறிப்போனால் அவர்களுடைய கல் மதில் இடிந்துபோகும்' என்றவன்
12. பிடரி முறிந்து செத்தவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




❑ போதகர் வேதநாயகம் மகாராஜா




**சங்கீதம் 119:1 கர்த்தருடைய வேதத்தின்படி நடக்கிற உத்தம மார்க்கத்தார் பாக்கியவான்கள்.**

**யோவான் 1:1-3 (1.) ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது. 2. அவர் ஆதியிலே தேவனோடிருந்தார். 3. சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று: உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை.** தேவனுடைய வார்த்தையின் வெளிப்பாட்டின் அடிப்படையிலே அந்த வார்த்தைக்கு சிறப்பான அடையாளமானவர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து. நாங்கள் எப்படியான இனிமையான, அன்பான, வார்த்தைகளைக் கேட்டாலும் சிறப்பான, மெய்யான, நேர்மையுள்ள, கறைதிறை பிழையற்ற, பாவம் இல்லாத ஒரு வார்த்தை என்றால் **'அது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தான்'**. அந்த இயேசு தான் எங்களை நடத்துகின்ற மெய்யான வார்த்தை. பலர் அற்புதங்கள் என்ற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கங்களுக்குபோய் ஆண்டவருடைய வார்த்தையை விட்டுவிட்டார்கள். இன்னும் சிலர் செழிப்பு என்று இன்னொரு பக்கத்தால் சென்று கர்த்தருடைய வார்த்தையை விட்டுவிட்டார்கள். உண்மையானதும், சிறப்பானதுமான தேவனுடைய வார்த்தையையும் அதன்படி வாழ்வதையும் அனேகர் விட்டுவிட்டார்கள். ஆனால் கர்த்தருடைய வார்த்தைதான் மேலானதும் முக்கியமானதுமாகும். அதை எங்களுடைய வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டும்.

அவரே வார்த்தை, நாங்கள் எப்படி வாழ வேண்டும் என்ற வாழ்க்கை முறையை வாழ்ந்து காட்டியவர். ஆகவே இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையின் அடிப்படையிலும், மரியாளின் வாழ்வில் ஏற்பட்ட ஒரு காரியத்தின் அடிப்படையிலும் நாங்கள் ஆண்டவருடைய வார்த்தையை முக்கியத்துவப்படுத்த வேண்டும் என்பதை கண்டு கொள்ள வேண்டும்.

## 01. இயேசு தன் வல்லமையையும், அதிகாரத்தையும்விட வார்த்தையை கடைப்பிடித்தார்

**மத்தேயு 3:17 அன்றியும், வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி: இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன் என்று உரைத்தது.** இங்கே பிதாவிடம் இருந்து இயேசு கிறிஸ்துவைக் குறித்த ஒரு சாட்சி வந்தது. **மத்தேயு 4:1-3 (1.) அப்பொழுது இயேசு பிசாசினால் சோதிக்கப்படுவதற்கு ஆவியானவராலே வனாந்தரத்திற்குக் கொண்டுபோகப்பட்டார். 2. அவர் இரவும் பகலும் நாற்பதுநாள் உபவாசமாயிருந்த பின்பு, அவருக்குப் பசியுண்டாயிற்று. 3. அப்பொழுது சோதனைக்காரன் அவரிடத்தில் வந்து: நீர் தேவனுடைய குமாரனேயானால், இந்தக் கல்லுகள் அப்பங்களாகும்படி சொல்லும் என்றான்.** இவர் என்னுடைய நேசகுமாரன் என்று சொன்னது மெய்யானது! அவர் சொன்னதிலே மாற்றமே இல்லை. இங்கே பெரிய ஒரு போட்டி, நேர் எதிர்மறையான வார்த்தை. 'இவர் என்னுடைய நேசகுமாரன்' என்று தேவன் சொல்கிறார். பிசாசு சொல்கின்றான்: 'நீர் தேவனுடைய குமாரனேயானால்?...' ஆண்டவருக்கு கல்லுகளை அப்பமாக்குவது பெரிய காரியமல்ல. வேதம் சொல்கிறது; **அவர் சொல்ல ஆகும், அவர் கட்டளையிட நிற்கும்.** அவர் சர்வ வல்லமையுள்ளவர். ஆனால் இந்த நேரத்தில் இயேசு கல்லை அப்பமாக்காதது, பிசாசு சொல்லி இயேசு செய்யமாட்டார். *நாங்கள் பிசாசு சொல்லி எத்தனையோ காரியங்களை செய்திருக்கிறோம். அது யாருக்கும் தெரியாது ஆனால் ஒவ்வொருவருடைய தனிப்பட்ட வாழ்க்கையிலும் பிசாசு சொல்லி எதைச் செய்தீர்கள் என்று மற்றவர்களுக்கு தெரியாவிட்டாலும் உங்களுக்கு தெரியும் என்று நான் நினைக்கிறேன்.* அத்துடன் தன்னிடம் அதிகாரம், வல்லமை இருக்கிறது என்று செய்யவுமில்லை.

**மத்தேயு 4:4 அவர் பிரதியுத்தரமாக: மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே என்றார்.** ஆண்டவர் தன்னுடைய அதிகாரத்தை பயன்படுத்துவதற்கு கூட வார்த்தையை வைத்துத்தான் பயன்படுத்தினார். இயேசு வார்த்தையை முதன்மைப்படுத்தியதை இங்கே காண்கிறோம். கர்த்தருடைய வார்த்தையை அங்கே மேன்மையாக காண்பித்தார். எங்களுடைய வாழ்வில் குறைவுகள், சோதனைகள் வரும்தான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லையென்று சொல்லவில்லை, ஆனால் எந்த சோதனையின் நேரத்திலும் நாங்கள் எங்களுடைய அதிகாரத்தை காண்பிப்பதை விட கர்த்தருடைய வார்த்தையின் முதன்மையைக் காண்பிக்க வேண்டும்.

அப்பமாக்குதல் அதிகாரத்தோடு, வல்லமையோடு சம்பந்தப்பட்டது, அதை செய்வது இயேசுவுக்கு கடினமான காரியம் அல்ல. ஆனால் இயேசு தேவனுடைய வார்த்தையைத்தான் முதன்மைப்படுத்த வேண்டும் என்பதனை தன்னுடைய சோதனையின் நேரத்திலும் செய்து காட்டினார். எத்தனையோவிதமான சோதனைகளை முகங்கொடுக்க வேண்டும். உங்களுக்கு இருக்கிற ஸ்தானம், அதிகாரங்கள் எல்லாம் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்பட்டவைகள். தேவனுடைய வார்த்தையின் அடிப்படையிலே நிறைவேற்ற வேண்டும். நான் இரட்சிக்கப்பட்டேன், இயேசுவின்பிள்ளை என்று நீங்கள் சொல்லலாம். வார்த்தைக்கு வெளியே நின்று நான் இயேசுவின் பிள்ளை என்று சொல்கிறவர்களும் உண்டு. இயேசுவின் நாமத்தினாலே பிசாசே போ என்று சொல்லும் போது பிசாசு போகும்: ஆனால் இயேசு அதில் பிரியப்படுவாரா? எங்களுடைய அதிகாரங்கள் கர்த்தர் கிருபையாய் ஈந்த செயல்களை ஆண்டவருடைய வார்த்தையில் நின்று பிரயோகிப்பது தான் செம்மையான, சரியான காரியம். வார்த்தையை கருத்தில் கொள்ளாது எமது அதிகாரங்கள், வல்லமையைப் பயன்படுத்தி செய்யும் அற்புதங்கள் தேவனை ஒரு போதும் மகிமைப்படுத்தாது. இயேசு சிறப்பான வார்த்தையை சொல்லியிருக்கிறார்.

நியாயத்தீர்ப்பின் நேரத்தில்: **அந்நாளில் அநேகர் என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள். அப்பொழுது, நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை: அக்கிரமச்செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்றுபோங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன்.** தேவனுடைய வார்த்தையை கைக்கொள்ளாமல் அற்புத அடையாளங்களை செய்ய முடியும். தேவனுடைய வார்த்தைக்கு முக்கியத்துவம் கொடாமல், கட்டுப்படாமல் மற்றவர்கள் வியக்கத்தக்க – போற்றப்படத்தக்க காரியங்களைச் செய்ய முடியும். ஆனால் அக்கிரமச் செய்கைக்காரரே என்னைவிட்டு அகன்று போங்கள் என்று தேவன் ஒரு நாள் சொல்லுவார். ஏனென்றால் கர்த்தருடைய வார்த்தையை முதன்மைப்படுத்தாமல் செய்யப்பட்ட ஒன்றையும் இயேசு அந்த நாளில் ஏற்றுக் கொள்ளமாட்டார்.

எங்களுடைய செயல்கள் எல்லாம் தேவனுடைய வசனத்திற்குள் அடங்கியிருக்க வேண்டும். ஆண்டவருடைய வார்த்தையை மற்றவர்களுக்கு சொல்லுங்கள். கர்த்தருடைய வார்த்தை உங்களுக்குள் கொழுந்துவிட்டு எரியத்தக்கவிதத்தில் தியானியுங்கள். சாத்தான் கல்லை அப்பமாக்க சொல்லியும் இயேசு செய்யவில்லை. ஆனால் 'இயேசு வெளிப்படையாகத் தெரியக்கூடிய கல்லை அப்பமாக்காமல்; தேவனுடைய வார்த்தையை முதன்மைப்படுத்தி பிசாசை மேற்கொண்டார்'. அவர் ஆண்டவருடைய வார்த்தையை முதன்மைப்படுத்த வேண்டும் என்றே பார்த்தார். நீங்கள் தீர்மானம்பண்ணுங்கள், எந்த நிலையாக இருந்தாலும் தேவனுடைய வார்த்தையின் அடிப்படையில் தான் செயலாற்றுவேன் என்று. உங்களுடைய ஒவ்வொரு காரியத்தையும் கர்த்தருடைய வார்த்தையின் அடிப்படை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிலே செய்ய வேண்டும். அது தான் தேவன் விரும்புகின்ற காரியம். 'எல்லா வற்றையும் அனுபவிக்க எனக்கு அதிகாரம் உண்டு ஆனால் எல்லாம் தகுதியாயிராது' என்ற வசனத்தை தியானித்த போது எல்லாம் தகுதியாயிராது என்பது 'வசனத்தை முதன்மைப்படுத்தாத எதுவும் தகுதியாய் இராது'. தேவனுடைய வார்த்தைக்கு முக்கியத்துவம் கொடுத்து அதன்படி செய்வதுதான் தகுதியானது.

தேவனுடைய நாமத்தின் மகிமைக்காக வார்த்தையின் அடிப்படையில் அற்புதங்கள், அடையாளங்கள், வல்லமையான காரியங்களை செய்கிறவர்களுக்காக கர்த்தருக்கு ஸ்தோத்திரம். ஆனால் வார்த்தையை முதன்மைப்படுத்தாமல் செய்தால் கர்த்தர் அதற்குரிய நியாயத் தீர்ப்பை ஒரு நாள் தருவார். ஆண்டவருடைய வார்த்தையை எந்த இடத்திலும் எந்த நேரத்திலும் நாங்கள் முக்கியத்துவப் படுத்த வேண்டும். தேவனுடைய வார்த்தையை புறந்தள்ளி ஆசீர்வாதங்களை தேடுவது எல்லாம் தவறானது. இப்படியான மனிதர்களைப் பார்த்து; நான் உங்களை அறியேன் என்று இயேசு சொல்வார். ஆண்டவருடைய வார்த்தையை முதன்மைப் படுத்துங்கள் அங்கே ஜீவன் உண்டு, வெற்றி உண்டு, சந்தோஷம் உண்டு, விடுதலை உண்டு, ஜெயம் உண்டு.

## 02. உண்மையான ஆராதனையும் வார்த்தைக்குள்ளான தாகவே இருக்கும்.

மத்தேயு 4:8-10 (8.) **மறு படியும், பிசாசு அவரை மிகவும் உயர்ந்த மலையின்மேல் கொண்டுபோய், உலகத்தின் சகல ராஜ்யங்களையும் அவைகளின் மகிமையையும் அவருக்குக் காண்பித்து: 9. நீர் சாஷ்டாங்கமாய் விழுந்து, என்னைப் பணிந்து கொண்டால், இவைகளையெல்லாம் உமக்குத்தருவேன் என்று சொன்னான். 10. அப்பொழுது இயேசு: அப்பாலே போ சாத்தானே: உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று எழுதியிருக்கிறதே என்றார்.** நாங்கள் சரியான தெளிவோடு அறிவை பெற்றவர்களாய் ஆராதிக்க வேண்டும். அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று எழுதி யிருக்கிறதே! என்று இயேசு சொன்னார். நாங்கள் இதுவரைக்கும் யாரை ஆராதனை செய்தோம்? பலர் ஆராதிக்கின்ற நேரத்தில் கூட தங்களுடைய தேவைகளை நினைத்து, அந்த நேரத்தில் அழுகின்ற மக்கள் உண்டு. ஆனால் ஆராதனை என்பது உலகத்தின் ஆசீர்வாதத்தின் நிமித்தமாக கர்த்தரை வணங்குவதில்லை. அப்படி உலக ஆசீர்வாதங்கள் கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு ஆராதித்தால் அது தேவனை ஆராதிக்கும் ஆராதனை அல்ல. மாறாக பிசாசையோ அல்லது பொருளையோ ஆராதிக்கும் ஆராதனையாகும். ஆராதனை நேரங்களில் எங்கள் ஆசீர்வாதங்களின் நிமித்தமாய் ஆராதிக்கிறோம் என்ற நிலைக்குள் வந்தால் உண்மையில் தேவனை அராதிக்க முடியாது. நான் ஆராதித்தால் ஆண்டவர் இதைத் தருவார், அதைத் தருவார், என்னை உயர்த்துவார் என்ற மனநிலை இருக்குமென்றால் நாங்கள் தேவனை ஆராதிக்காமல் வேறு எதையோ ஆராதிக்கிறோம்.

ஆராதனை என்பது பரலோகத்தின் மொழி. நாம் செழிப்பாக வரவேண்டுமென்பதற்காக அல்ல ஆராதனை. 'ஆராதனை என்பது தேவன் அவர் இருக்கின்ற நிலைக்காக அவரை மகிமைப் படுத்துவதாகும். 'ஆராதிக் கப்படத்தக்க ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவனை அவருக்குரிய சகல மகிமையை யும் கொடுத்து, எங்களுடைய குறைவுகள், இல்லாமைகள் எல்லாவற்றையும் மறந்து அவர் இருக்கிறார், அவர் எல்லாம்தர, செய்ய வல்லமையுள்ளவர் என்ற நிலையோடு உறுதியாக இருந்து அவரை நோக்கிப் பார்ப்பது, அவருக்கு பிரியமாக வாழ்வது தான் ஆராதனை. சாத்தான் இயேசுவை நோக்கி; நீர் என்னை வணங்கினால் இவைகளையெல்லாம் உமக்குத் தருவேன் என்று, ஆண்டவருக்கு இதில் உரிமை உண்டு ஆனால் மனிதன் செய்த பாவத்தின் நிமித்தம் உலகம் பிசாசின் கையில் இருக்கிறது. இயேசு இந்த நேரத்தில் தன்னுடைய உரிமையைப் பாராட்டாமல் தேவனுடைய வார்த்தையை முதன்மைப்படுத்தினார்.

கல்லுகளை அப்பமாக்குவது அவருடைய வல்லமையோடு, அதிகாரத் தோடு சம்பந்தப்பட்டது. அவர் தன்னுடைய அதிகாரத்தைப் பயன்படுத்தாமல் தேவனு டைய வார்த்தையை முதன்மைப்படுத்தினார். விழுந்து பணி என்று சொன்ன போது அவர் தன்னுடைய உரிமைகளை பார்க்கவில்லை. அதற்கு மேலாக தேவனுடைய வார்த்தை என்ற ஒன்று உண்டு அதைத்தான் காண்பித் தார். அழிந்து போகிற உலக காரியங்கள் நிமித்தமாக ஜீவனுள்ள தேவனுடைய வார்த்தையின்படி வாழ்வதை மறந்து போய்விட்டோம். ஆனால் இயேசு எங்களுக்கு வாழ்ந்து காட்டியிருக்கிறார். தான் தேவனுடைய சித்தத்தை நிறை வேற்றி வாழ்கிற போது அதெல்லாம் தன்னுடையது என்பது இயேசுவுக்கு தெரியும். என்னுடைய வாழ்வில் என்ன நடக்கப்போகிறதோ என்று கவலைப்பட வேண்டாம். சோர்ந்து போகவேண்டாம். கர்த்தர் எல்லாவற்றையும் சரியாக உங்களுக்கு கொண்டு வருவார். ஆண்டவரின் வார்த்தையை முதன்மைப்படுத்தி வாழ வேண்டும், கைக்கொள்ள வேண்டும். அதை நடைமுறைப்படுத்தி வாழ்கிற போது மிகுதியானது எல்லாவற்றையும் கர்த்தர் பார்த்துக் கொள்வார்.

முதலாவது தேவனுடைய ராஜ் யத்தையும், அவருடைய நீதியையும் தேடுங்கள். அப்பொழுது இவைகளெல் லாம் உங்களுக்கு கூடக் கொடுக்கப்படும். அவருடைய நீதியெல்லாம், அவருடைய இராச்சியத்தைக் குறித்த வெளிப்படுத்தல் எல்லாம் பரிசுத்த வேதாகமத்தில் இருக் கிறது. உருவாக்கப்பட்ட கதையொன்றை கேள்விப்பட்டேன், நாங்கள் சரியாக போகிற போது அதுவும் சரியாக வரும் என்று விளங்கப்படுத்துவதற்காகத் தான் இந்த கதை.

ஒரு தாய் நாயும், குட்டி நாயும் இருந்தது. ஒரு நாள் குட்டி நாய் எதையோ தேடிக் கொண்டி ருந்தது. அப்பொழுது தாய் நாய் குட்டி நாயைப் பார்த்து எதனைத் தேடுகிறாய் என்று கேட்டதாம். அதற்கு குட்டி நாய்: அம்மா நான் சமாதானத்தைத் தேடுகிறேன் என்றதாம். ஆ.. அப்படியா நன்றாகத் தேடு என்று சொல்லிவிட்டு அம்மா நாய் சென்று விட்டது. சற்று நேரத்தின் பின் குட்டி நாய் வந்து இருந்த போது தாய் நாய் கேட்டதாம், என்ன உன்னுடைய சமாதானத்தை கண்டுபிடித்து விட்டாயா? என்று, அதற்கு குட்டி நாய்: நான் கண்டு பிடித்துவிட்டேன் அம்மா ஆனால் அது எனது கைக்கு கிடைக்குதில்லையே என்றது. அம்மா நாய் சமாதானம் எங்கே இருக்கிறது என்று கேட்ட போது: சமாதானம் தன்னுடைய வாலில் இருக்கிறது என்று குட்டி நாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொன்னதாம். நாய்க் குட்டி திரும்பும் போது அதன் வாலும் திரும்பிக் கொண்டிருந்தது. அம்மா நாய்க்கு ஆச்சரியம், நானும் அதைப் பிடிக்க முயற்சிக்கிறேன் என்று சொல்லி விட்டு, தாய் நாயும் போய் விட்டது. அடுத்த நாள் அம்மா நாய் கேட்டது, சமாதானத்தைப் பிடித்து விட்டாயா என்று. அப்பொழுது குட்டி நாய் கூறியது: இன்னுமே பிடிக்கவில்லை என்று. அதற்கு அம்மா நாய் கூறியது: நீ முன்னோக்கி ஒழுங்காகபோ, சமாதானம் உனக்கு பின்பதாக ஒழுங்காக வந்து கொண்டிருக்கும் என்று.

நாங்களும்தேவனுடைய வார்த்தையின் பிரகாரம் ஒழுங்காக நடக்கிற போது எங்களுக்கு வேண்டிய சமாதானத்தையும், ஆசீர்வாதங்களையும், தேவைகளையும் தேவன் சந்தித்துக் கொண்டே வருவார். என்னுடைய சமாதானத்தை உங்களுக்கு வைத்துப் போகிறேன் என்று இயேசு சொன்னார். கலங்கி அலைய வேண்டாம்! கண்ணீர் வடிக்க வேண்டாம்! "அவரைப் பணிவது என்பது; கீழ்ப்படிந்து அடங்கி, தாழ்மைப்பட்டு எனக்கு மேலே ஒருவர் இருக்கிறார், நான் அவரைப் பின்பற்று கிறவன் என்கிற மனநிலையோடு இருந்து தேவனுடைய வார்த்தையைக் கைக் கொண்டு வாழ்வது தான் ஆராதனை". நாங்கள் ஆராதனைகளை இன்னும் அதிகமானவர்களுக்கு செய்து கொண்டி ருக்கிறோம், அந்த விஷயத்தில் இரட்சிக் கப்பட்டவர்கள் கவனமாய் இருக்க வேண்டும்.

நீங்கள் இரட்சிக்கப்பட்டவர்கள் என்றால், உங்களுடைய கைத்தொலை பேசியில் நீங்கள் விட்டிருக்கின்ற படம் யாருடையது?, உங்களுடைய வீடுகளில் காணப்படும் நாட்காட்டிகளில் இருக்கும் படங்கள் யாருடையது? நாங்கள் இரட்சிக் கப்பட்டிருக்கிறோம் ஆனால் ஆராத னையை வேறு யாருக்கோ செய்து கொண்டிருக்கிறோம். தேவனை தவிர மகிமையை வேறு யாருக்காவது கொடுத் தால் அது தேவனுடைய வார்த்தையின் அடிப்படையில் வந்த ஆராதனை அல்ல. வார்த்தையின் அடிப்படையில் ஆராதிப்பது என்பது: ஆவியோடும் உண்மையோடும் ஒரே தேவனை தொழுது கொள்வது. எங்களை அறியாமலேயே தேவனைத் தவிர வேறு காரியங்களை ஆராதிக்கிற சூழ்நிலைக்குள் வந்திருக்கிறோம். தயவு செய்து இன்றைக்கே அந்த காரியங்களை எம்மைவிட்டு எடுத்துப்போட வேண்டும். நாங்கள் இரட்சிக்கப்பட்டிருந்தால் பூரணமாய் இரட்சிக்கப்பட்டிருக்க வேண்டும்.

## 03. குறைவின் நேரத்தில் மரியாள் வார்த்தையை முதன்மைப்படுத்தினாள்

**யோவான் 2:1-3 (1.) மூன்றாம் நாளிலே கலிலேயாவிலுள்ள கானா ஊரிலே ஒரு கலியாணம் நடந்தது: இயேசுவின் தாயும் அங்கேயிருந்தாள். 2. இயேசுவும் அவருடைய சீஷரும் அந்தக் கலியாணத் துக்கு அழைக்கப்பட்டிருந்தார்கள். 3. திராட்ச ரசங்குறைவுபட்டபோது, இயேசுவின் தாய் அவரை நோக்கி: அவர்களுக்குத் திராட்ச ரசம் இல்லை என்றாள்.** குறைவுகளைப் பார்த்து, பார்க்க வேண்டியதை, தெரிந்து கொள்ள வேண்டியதை தெரிந்தெடுக்காமல் விடுவது தற்கால தேவனுடைய பிள்ளை களின் பழக்கமாகிவிட்டது. குறைவு இருக்கி றது என்பதற்காய், தேவனுடைய சத்திய வார்த்தையை ஏற்றுக்கொள்ள, புரிந்து கொள்ள முடியாத நிலை காணப்படுகிறது. மரியாள்; அவர் உங்களுக்கு என்ன சொல்கிறாரோ அதன்படி செய்யுங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றாள். மரியாள் குறைவின் நேரத்தில் சரியான நோக்கம் உடையவளாக இருந்தாள் அல்லது அதற்குள்ளும் ஒன்றை புரிந்து கொண்டாள். குறைவின் நேரத்திலும் இயேசுவின் வார்த்தையை முக்கியத்துவப் படுத்துகிறதாக அந்த நேரம் இருந்தது.

வாழ்வில் பல குறைவுகள், முற்றுமாக நிறைவுபெறாத காரியங்கள் இருந்தாலும் கூட இந்த குறைவுகள் எல்லாவற்றின் மத்தியிலும் <u>குறைவற்ற தேவனுடைய வார்த்தையை</u> நாங்கள் முதன்மைப்படுத்த வேண்டும். எங்களுடைய குறைவுகள் தேவனை மறக்கவோ, ஜீவனுள்ள வார்த்தையை மறுதலிக்கவோ, தேவனுக்கு பிரியமற்ற வழிகளில் எங்களுடைய குறைவுகளை நிறைவாக்கவோ நாங்கள் முற்படாமல், குறைவின் நேரத்தில் ஆண்டவருடைய வார்த்தைக்கு அடங்கி, கீழ்ப்படிகிறபோது செம்மையான, நேர்மையான, சரியான நிறைவை இயேசு ஏற்படுத்தித்தருவார். **சங்கீதம் 19:7 கர்த்தருடைய வேதம் குறைவற்றது** என காண்பிக்கிறது. கர்த்தருடைய வார்த்தை மேலானது, முதன்மையானது. அனேகர் குறைவிலே ஏன் அப்படியே தொடர்ந்து இருக்கிறோம் என்றால், குறைவைக் கண்டு அதிலே மூழ்கிப் போயிருக்கிறோம். தேவனுடைய வார்த்தை என்ற நிறைவு இருக்கிறது என்பதனை புரிந்து கொள்வதில்லை. பலருடைய வாழ்வில் குறைவு என்பது கர்த்தருடைய வார்த்தை என்ற நிறைவை மறக்கப்பண்ணிவிட்டது. நிறைவை தருகின்ற வார்த்தையை புரிந்து கொள்ள முடியாமல் செய்துவிட்டது.

வாழ்விலே குறைவு உண்டு. குறைவில்லாத மனிதர்கள் இல்லை, வேதனைகள் இல்லாத மனிதர்கள் இல்லை அதன் மத்தியிலே ஒரு நிறைவை காண வேண்டுமென்றால் தேவனுடைய வார்த்தையை முதன்மைப்படுத்தி அதன்படி வாழ்வதற்காய் உங்களை அர்ப்பணித்துக் கொள்ளுங்கள். அது நிறைவைக் கொண்டு வரும்.

## 04. மரண நேரத்திலும் இயேசு வார்த்தையை முதன்மைப்படுத்தினார்

**யோவான் 19:28 அதன்பின்பு, எல்லாம் முடிந்தது என்று இயேசு அறிந்து, வேதவாக்கியம் நிறைவேறத்தக்கதாக: தாகமாயிருக்கிறேன் என்றார்.** அவரை வாரினால் அடித்து, தலையிலே முள்முடி வைத்து, கை, கால்களை சிலுவையில் ஆணியால் அடித்து சிலுவையிலே தொங்கிக் கொண்டிருக்கிறார். அவருடைய சரீரம் உழப்பட்ட தரை போன்று இருக்கிறது என்று வேதம் சொல்கிறது. எவ்வளவு வேதனையின் மத்தியில் தொங்கிக் கொண்டிருந்த போது கூட என்னுடைய ஆண்டவருடைய வார்த்தை: இன்னும் ஒன்று உண்டு, அது நிறைவேற வேண்டுமே என்ற நல்ல எண்ணம் வருகிறது. தன்னுடைய சரீரத்தில் வேதனை, தாங்க முடியாத நேரத்தில் கூட இயேசு வார்த்தையை முதன்மைப் படுத்தினார்.

**"தேவன் தாமே உங்களை நிறைவாக ஆசீர்வதிப்பாராக.**

---

**அனல் 2021 புரட்டாதி – ஐப்பசி மாதங்களில் கேட்கப்பட்ட நொடிக்கான விடை:**

**அத்திமரம்**

(ஆதி 3:7, லூக்கா 19:4, மத்தேயு 21:19-21; 24:32, லூக்கா 13:6-8, யோவான் 1:48-50, வெளி 6:13)

விடைகளை எழுதி அனுப்பிய அனைவருக்கும் எமது பாராட்டுக்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கோப்பையை உடைத்தது யார்?

**வேதப்பகுதி: லூக்கா 15:13-23**

வீட்டிற்குள் வந்த அம்மா சமையலறைக்குச் சென்ற போது அங்கே அழகான ஒரு பீங்கான் கோப்பை உடைந்து கிடந்தது. எப்படி உடைந்தது என்று அம்மா கேட்டார்கள். ஆலனும் எனக்குத் தெரியாது என்றான். அனிதாவும் எனக்குத் தெரியாது என்றாள். ஆலன் அல்லது அனிதா தான் அதனை உடைத்திருக்க வேண்டும். யாரும் உண்மை சொல்லாததால் இரண்டு நாட்கள் அப்பாவும், அம்மாவும் துக்கமாக இருந்தனர். பிள்ளைகள் பொய் பேசுகிறார்களே என்ற வருத்தம் அப்பாவுக்கும், அம்மாவுக்கும்.

அப்பாவும், அம்மாவும் சோகமாக இருப்பதை உணர்ந்தான் ஆலன். 'அம்மா என்னை மன்னியுங்கள், நான் தான் அந்த கோப்பையை உடைத்தேன்' என்றான். அம்மாவுக்கும், அப்பாவிற்கும் ரொம்ப சந்தோஷம். 'ஆலன் கோப்பை உடைந்தது பெரிய பிரச்சினை அல்ல. நீ உண்மை பேசாதது தான் வருத்தம். இப்போது நீ உண்மையை சொன்னதால் எங்களுக்கு ரொம்ப சந்தோஷம்' என்றனர்.

நாம் தவறுகளை மறைக்கக்கூடாது. மறைக்காமல் மன்னிப்பு கேட்டால் கர்த்தர் சந்தோஷமாக மன்னிப்பார்.

**சிந்தனைக்கு:-**

**தேவன் நாம் தவறு செய்தால் மன்னிப்பார்; தவறை உணர மறுத்தாலோ துக்கப்படுவார்.**

நன்றி: 'சின்னஞ்சிறு இதயங்களே கேளுங்கள்'

## அனல் சந்தா விபரம்

இச் சஞ்சிகையைத் தொடர்ந்து பெற விரும்புகிறவர்கள் உங்களது பெயரையும், முகவரியையும் தெளிவாக குறிப்பிட்டு சந்தாப்பணத்துடன் ஆசிரியருக்கு அனுப்பி வைத்தால் சந்தாதாரர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படுவீர்கள்.

(காசோலை, காசுக்கட்டளை அனைத்தும் "சீயோன் தேவாலயம்" / ZION CHURCH என எழுதப்பட வேண்டும்)

## சந்தா விபரம் (தபால் செலவு உட்பட)

Subscription (Per Year S.L. Rs)

| | |
|---|---|
| இலங்கை (Sri Lanka) | 245.00 |
| இந்தியா (India) | 490.00 |
| கனடா, அமெரிக்கா (Canada & USA) | 1015.00 |
| சிங்கப்பூர், மலேசியா (Singapore & Malaysia) | 525.00 |
| மத்திய கிழக்கு நாடுகள் (Middle East Countries) | 510.00 |
| ஜேர்மனி, இங்கிலாந்து, இத்தாலி, அவுஸ்ரேலியா (Germany, England, Italy & Australia) | 850.00 |

சந்தாதாரராக விரும்பின் பின்வரும் மாதிரிக் கூப்பனை தயார் செய்து சந்தாப்பணத்துடன் சேர்த்து அனுப்பி வைக்கவும்.

## சந்தா மாதிரிக் கூப்பன்

பெயர்:..........................................

முகவரி:........................................

................................................

................................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# என் நாமத்துக்குப் பயந்திருக்கிற உங்கள் மேல் நீதியின் சூரியன் உதிக்கும்.

மல்கியா 4:2

கிறிஸ்துவுக்குள் அன்பான அனல் வாசகர்களுக்கு!
இவ் வருடம் முழுவதும் வெளிவந்த அனல் சஞ்சிகை உங்கள் அனைவருக்கும் ஆசீர்வாதமாக இருந்திருக்கும் என்று விசுவாசிக்கின்றோம்.
எதிர்வரும் வருடத்திலும் உங்கள் பிரதிகளை சிரமமின்றி பெற்றுக் கொள்ள உங்கள் சந்தாக்களைப் புதுப்பித்துக் கொள்ளுங்கள்.
அத்துடன் புதியவர்களுக்கும் இச் சஞ்சிகையை அறிமுகப்படுத்திக் கொள்ளுங்கள். அதனால் அவர்களும் தேவனுடைய ஆறுதலையும், ஆசீர்வாதத்தையும் பெற்றுக் கொள்ள முடியும்.
எதிர்வரும் வருடத்தில் வெளிவரும் வினாவிடை, குறுக்கெழுத்து, மற்றும் நொடி போன்ற போட்டிகளில் நீங்களும் பங்குபெறுவதுடன் உங்கள் பிள்ளைகள் அதில் பங்குபற்றி வேதாகம அறிவில் மேம்பட அவர்களை உற்சாகப்படுத்துங்கள்.
நீங்கள் அனல் சஞ்சிகையைப் பெற்றுக் கொள்ளும் உங்கள் முகவரியில் மாற்றம் இருப்பின் தயவு செய்து புதிய முகவரியை எமக்கு அறியத்தருவதற்கு மறக்க வேண்டாம்.

To:

Zion Church Office,
No: 29, 29/1 Ramaiah Chettiar Lane,
Jaffna, Sri Lanka.

அச்சமைப்பு: வைத்தி பதிப்பகம் - தொ.பே: 0772002351

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org